23 NOV

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 24 ஸபர் 15 இதழ் 268
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 9-11-84

## ★ இலங்கைத் தமிழர் பிரச்னை: புதிய யோசனைகளை ஜே. ஆர். பார்த்தசாரதியிடம் வெளியிட்டார்

### ‘அமிர்’ தகவல்

சென்னை, நவ. 8

“இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு சர்வகட்சி மாநாட்டின் மூலம் தீர்வுகாண்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் யோசனைகளை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அன்னை இந்திராவின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக அண்மையில் புதுடில்லி சென்றபோது இந்திய வெளியுறவு கொள்கைக் கமிட்டித் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியிடம் தெரிவித்தார்” என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதனை திரு. பார்த்தசாரதியே தம்மிடம் அண்மையில் தெரிவித்திருந்தார் என்றும் திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

மதுரையில் யூ. என். ஐ. நிருபருக்கு அளித்த பேட்டியில் மேற்படி விபரங்களை திரு. அமிர்தலிங்கம் வெளியிட்டார்.

இந்திய அரசு தமிழர் பிரச்

(5-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

# வெடி மருந்துக் ‘குகை’கள் நீர்கொழும்பில் முற்றுகை!

## பயங்கரவாதிகளுடன் தொடர்பு உண்டாம்!!

(நீர்கொழும்பு

**நீர்கொழும்புப் பகுதியில் நேற்று பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச் சோதனையில், வெடிமருந்து ‘பண்டகசாலைகள்’ நான்கு கண்டு பிடிக்கப்பட்டன!**

**இது சம்பந்தமாக இரகசியப் பொலிஸார் உடனடியாக மேற்கொண்ட விசாரணைகளில் மேற்படி நான்கு வெடிமருந்துக் ‘குகை’களுடன் பயங்கரவாதிகள் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது!**

பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து நீர்கொழும்பில் ஒரு மறைவிடமான இடத்தில் நான்கு வெடிமருந்துக் ‘குகை’களைப் பொலிசார் நேற்று முற்றுகையிட்டு, தேடுதல் நடத்திய போது இக்குகைகளிலிருந்து பெருமளவு வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன.

வெடிமருந்து வைக்கப்பட்டிருந்த இடங்கள் சட்டபூர்வமானவை இல்லையென்றும், இதன் உரிமையாளர்கள் உத்தரவுப் பத்திரம் எதுவும் வைத்திருக்கவில்லை என்பதும் விசாரணைகளில் இப்பொழுது தெரியவந்துள்ளது.

நான்கு வெடிமருந்துக் ‘குகை’களும் ‘சீல்’ வைக்கப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்

(5ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## இந்திரா அஸ்திக்கு கீதாஞ்சலி!

(சென்னை)

சென்னை ராஜாஜி மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அஸ்திக் கலசத்துக்கு விரிவானமுறையில் கீதாஞ்சலியும் செலுத்தப்படுகிறது.

பிரபல கர்நாடகஇசைப்

(8ம்பக்கம் 5ம் கலம்பார்க்க)

## ‘லலித்’ மட்டக்களப்பு விஜயம்

[மட்டக்களப்பு]

தேசிய பந்தோபஸ்துஅமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மட்டக்களப்பு பிரஜை

(8-ம் பக்கம் 4ம்கலம்பார்க்க)

## “ரஜீவ் பிரதமர் நியமனம்: மரபுக்குப்புறம்பானது” கருணாநிதி கருத்து

சென்னை, நவ. 8

“கடந்த மாதம் 31-ம் திகதி திரு ரஜீவ் காந்தியை இந்தியப் பிரதமராக இந்திய ஜனாதிபதி அறிவித்தது, ஏற்கனவேகடைப் பிடிக்கப்பட்டு வந்த மரபுகளுக்குப் புறம்பானது என்பதுதான் தி. மு. க.வின் கருத்து.”

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## இந்திராகாந்தி கொலையின் எதிரொலி: பாதுகாப்புத்துறை பிரதம ஆலோசகர் திடீர் ராஜினாமா!

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் கொலையைத் தொடர்ந்து இந்தியாவின் தேசிய பாதுகாப்பு சபையிலும், இந்திய புலனாய்வுத் துறையிலும் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்திய தேசிய பாதுகாப்பு சபையின் பிரதான ஆலோசகராகக் கடமையாற்றிய ஆர். என் காவ் தமது பதவியை திடீரென ராஜினாமாச் செய்துள்ளார்.

இப்பதவியே இந்திய பாதுகாப்புத்துறையில் மிகஉயர்ந்த பதவியென்று கருதப்படுகிறது.

இவரது ராஜினாமாவை இந்திய அரசும் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இவர் ‘இந்திய புலனாய்வுத்

(8ம் பக்கம் 4ம்கலம்பார்க்க)

## பூஸாவிலிருந்து 16 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

காலி பூஸா முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் மேலும் 16 பேர் விடுதலைசெய்யப்பட்டனர்.

இவர்களில் 14 பேர் நேற்று ‘யாழ்.தேவி’ மூலம் யாழ்ப்பாணம் வந்தனர். இருவர் கொழும்பில் தங்கிவிட்டனர்.

தற்போது காலி முகாமில் 39 பேர் மட்டுமே உள்ளனர். (க)

## இலங்கைத் தமிழர் பிரச்னை: பிரதமர் ரஜீவ் கவலை

புதுடில்லி, நவ 8

“இலங்கைத்தமிழர் பிரச்னை இன்னமும் தீர்க்கப்படாதது குறித்து நான் மிகவும் கவலையடைந்துள்ளேன்”

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்திடம் தெரிவித்தார்.

இந்திரா காந்தியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக கூட்டணித் தலைவர்

(5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## சர்வகட்சி மகாநாடு முழுநிறைவான கூட்டம் டிச. 17, 18-ல் நடைபெறும்

[கொழும்பு]

இம்மாதம் 15ம், 16ம் திகதிகளில் நடைபெறவிருந்த சர்வகட்சி மகாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மகாநாட்டின் முழுநிறைவான கூட்டத்தொடர் அடுத்த

(8ம் பக்கம் 5ம்கலம்பார்க்க

## அன்னை இந்திராவுக்குஇன்று யாழ். நகரமண்டபத்தில் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

அன்னை இந்திராவின் மறைவையொட்டிய அஞ்சலிக் கூட்டம், யாழ் நகரமண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெறவிருக்கிறது.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ வி கே. சிவஞானம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். பாலசிங்கம், கூட்டணி அமைப்புச் செயலாளர் திரு. எம் ஆலாலசுந்தரம், முன்னாள் யாழ் முதல்வர் திரு. இராஜா விசுவநாதன்,

(5ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## கைவிலங்குடனிருந்த கைதி மதிலால் குதித்து தப்பினர்!

### மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேகநபரான ஏறாவூரைச் சேர்ந்த ‘ஐயன்’

(5ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## இளம் பெண் மரணம்: டாக்டர், மனைவி கைது

(திருகோணமலை)

திருகோணமலையில், திருமணமாகாத 18 வயதுள்ள இளம் பெண் சட்டவிரோதக் கருச்சிதைவின் காரணமாக மரணமடைந்தது தொடர்பாக கருச்சிதைவுக்குக் காரணமாக இருந்த டாக்டரும் அவரது மனைவியும் திருமலைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் கைதுசெய்யப்பட்டு திருமலை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது டாக்டர் 2,500 ரூபா பிணையிலும், மனைவி 1,500

(8ம்பக்கம் 5ம்கலம் பார்க்க)

## எம். ஜி. ஆர். உடல்நலம்

நியூயோர்க், நவ 8

தற்போது நியூயோர்க் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதலமைச்சர்

(8ம் பக்கம் 5ம் கலம் பார்க்க

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் உடனடி விற்பனைக்குண்டு, விலை குறைவு. சீமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் வீதி, மயிலங்காடு, சுன்னுகம். 600

38 Sri தொடர் இலக்கமுடைய Toyota—Hiace Van விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். செ. குமரகுரு, சிவபுரவீதி, [illegible] வல்வெட்டித்துறை. 604

நல்ல நிலையிலுள்ள A-30 ஒஸ்ரின் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு:- க. குலசிங்கம், ஏழாலை மேற்கு, சுன்னுகம். 64)

ISUZU ELF 250 நல்லநிலையில் விற்பனைக்குள்ளது. றீகல் சினிமா யாழ்ப்பாணம். 651

யாழ்ப்பாணம் கண்டி வீதிக் கருகாமையில் ஸ்ரான்லிக் கல்லூரி வீதியில் 1 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு 5 மணிக்கு மேல் திருமதி சரவணமுத்து, 77, பாரதி வீதியில் இருக்கும் இல்லத்தில் தொடர்பு கொள்ளவும். 645

கொழும்புத்துறையில் துண்டி வீதியில் 3 பரப்பு காணி, பரந்தன் 7-ம் வாய்க்காலில் 8 ஏக்கர் காணி [இருபோகம் செய்யக்கூடிய நெற்காணி] அத்தியடி புது வீதியில் 2 பரப்புக் காணிக்குள் 5 அறைகளைக் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும் குயிக்ஸ் என்ரபிறைசஸ், 533 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 653

7 ஸ்ரீ தொடர்பிலக்க மொறிஸ் (OXFORD) காரும், C D 125 (TWIN) ஹொன்டா மோட்டார் சைக்கிளும் நல்ல நிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. அ. ரவீந்திரதாஸ், அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை. 654

## தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. (Broiler) இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். அண்ணு பாம், இணுவில். 595

பிடவை விற்பனையில் அனுபவமுள்ள ஆண்கள் தேவை. விண்ணப்பிக்கவும். அண்மையில் இருப்பவர் விரும்பத்தக்கது. அஜந்தாஸ், 54, பெரிய கடை, யாழ்ப்பாணம். 623

கேற் கிறில் செய்வதில் அனுபவம் உள்ள வெல்டர், உதவியாளரும் பலசரக்கு வியாபாரத்தில் அனுபவம் உள்ள விற்பனையாளரும் தேவை. சகல உபகரணங்களுடன் கொமிசனுக்கு வெல்டிங் செய்யும் ஸ்தாபனமும் கொடுக்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும். துர்க்காஸ் 130, K. K. S. ரேட், யாழ்ப்பாணம். 641

நல்லூர் இந்து விடுதி உணவுச்சாலையில் பணியாற்றுவதற்கு ஆண்/பெண் ஊழியர்கள் தேவை. ஞாயிறு (11-11-84) காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை நல்லூர் இந்து விடுதிக்கு சமூகம் தரவும். நிர்வாகி, இந்து விடுதி, உணவுச்சாலை, நல்லூர். 644

## வாடகைக்கு

சகல நவீன வசதிகளுடன் இரண்டு அறைகள் கொண்ட புதிய வீடு, திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையிலுள்ள பணிக்கர் வளவு ஒழுங்கையில் வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு திருநாவுக்கரசு, பணிக்கர் வளவு, பலாலி வீதி, திருநெல்வேலி. 652

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள வீடு (மேல் வீடு) சகலவசதிகளுடன் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு:- பாலகுமார், 81, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 618

சகல நவீன வசதிகளுடன் நாலு அறைகள் கொண்ட புதிய வீடு, யாழ். 37ம் இலக்க மாட்டின் ஒழுங்கையில் வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு: ராதா, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாண முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். 588

## பயிற்சி

எலெக்றிக்கல் வயறிங், வெல்டிங், றேடியோ, T. V. செய்முறைப் பயிற்சியுடன் இவ்வருடத்திற்கான கடைசிப் பிரிவு ஆரம்பமாகின்றது. 14-11-84 J. E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 646

## யாருடையது

Light Roadster Ladies சைக்கிள் எமது ஸ்தாபனத்துக்கு முன்னுல் நின்று எடுத்து வைத்துள்ளோம். உரிமை உடையவர் தகுந்த அடையாளம் காட்டி வசந்தா ஸ்ரோர்ஸ், No: 78, பெரியகடை, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளவும். 635

## வகுப்புகள்

G. S. Q. (Maths), B. Sc (Maths), G. S. Q. (Bio), B. Sc. (Bio), Montessori Diploma Teachers Training Course (பாலர் ஆசிரியர் பயிற்சி), Home Science Diploma Course (மனையியல் பயிற்சி) மேற்படி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. 30-11-84 க்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 634

## FOR SALE

Chappel Piano in Excellent Condition for sale. Contact: Mrs. Desiree Saverimuttu, 55, Beach Road, Jaffna. 631

## றீகல் 'மினி'

புதிய
தமிழ், ஆங்கில, ஹிந்தி
திரைப்படங்களுடன்,
ஆரம்ப நன்னுளை
விரைவில்
எதிர்பாருங்கள்.
650

## பிறந்த தின வாழ்த்து



அ பிருந்தன்

பலாலி ரேட் கோண்டாவில் கிழக்கைச்சேர்ந்த அருள்சாகரன் ரூபராணி தம்பதிகளின் அருமைப் புதல்வன்

**பிருந்தன்**

9-11-1984ல் தனது முதலாவது பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாடுகிருர். அவரை அம்மா, அப்பா, அம்மப்பா, அம்மம்மா, சித்தி ஆகியோர் வாழ்த்துகிருர்கள். 637

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற மணியர் ஐயாத்துரை பெண் திலகவதியின் மரணசாதனமில்லா சொத்துக்களின் விடயத்தில்,

— மரணமெய்தியவர்

மரணசாதன
நியாயாதிக்கம் ரி/

மணியர் ஐயாத்துரை அரசடி கொக்குவில், மேற்கு, கொக்குவில்,

— மனுதார்

எதிராக

1. மணியர் ஐயாத்துரை மகள் அருந்ததி (பராயமற்றவர்)
2. முதலித்தம்பி சுப்பையா, இருவரும், கொக்குவில் மேற்கு, கொக்குவில். 2ம் எதிர்வாதி 1ம் எதிர்வாதியின் சட்டப் பாதுகாவலர் ஆவார்.

— எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

இன்று 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்

திகதி 16-11-1984வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்
642

## பிரார்த்தனை

(பண்டத்தரிப்பு)

தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பூரணசுகம் பெறவேண்டும் என்று பிரார்த்தித்து வடலியடைப்பு பராத்தனை ஐயனூர் ஆலயத்தில் விசேட பூசைகள், பஜனை ஆகியன அப்பகுதி மக்களினுல் நடத்தப்பட்டுள்ளன.

## நல்லூர் முதலிடம்

(கல்வியங்காடு)

யாழ். கல்வி மாவட்டத்தில் நல்லூர் கல்வி வட்டாரப் பாடசாலைகளைச் சேர்ந்த 53 மாணவர்கள் இவ்வருட 5-ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள் (7ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## விற்பனைக்கு

சீ-நோர் காரைநகரில் நவீனமுறையில் தயாரிக்கப்பட்ட கால்நடைஉணவு (மீன்தூள்) விற்பனைக்குண்டு. ஒருஅந்தர் விலை ரூபா. 850/- வீதம் மொத்தமாகவும், சில்லறையாகவும் (ஞாயிறு) தவிர்ந்த நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்கட்கு:-

பிரதிப் பொதுமுகாமையாளர்,
சீ—நோர். குருநகர்.
தொ. பே. இ. 23604.
(636)

உ
ஓம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் இரத்தாக்ஷி ஆண்டு ஐப்பசித் திங்கள் 25-ம் நாள் (10-11-84) சனிக்கிழமை பிற்பகல் 1-0 மணி முதல் 2-15 மணி வரையில் வரும் கும்பலக்கின சுப முகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன் **ஸ்ரீபாஸ்கரன்** (பங்காளர், நியூரோன்எலெக்றிக்கல்ஸ், யாழ்ப்பாணம்) அவர்கட்கும் | எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி **குமுதினி** அவர்கட்கும் |

நல்லூர் சிவன் கோயிலில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| **து. அழகரத்தினமும்,** (நிர்வாக இயக்குனர், நியூரோன் எலெக்றிக்கல்ஸ், யாழ்ப்பாணம்) | **து. ஸ்ரீபத்மநாதனும்,** (முகாமையாளர், அரச வடிசாலைக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்) |
| திருமதி **P. அழகரத்தினமும்,** 28, சேர். பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். | திருமதி **ஸ்ரீபத்மநாதனும்,** 69, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |

(593)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **ப. யோகீஸ்வரன்** [முன்னுள் மேற்பார்வையாளர், யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்] அவர்களுக்கும் | எனது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **செ. பிரேமலதா** (நிதிப்பிரிவு, யாழ். வளாகம்) அவர்களுக்கும் |

நிகழும் இரத்தாக்ஷி வருடம் ஐப்பசி மாதம் 26-ம் திகதி (11-11-1984) ஞாயிற்றுக்கிழமை பகல் 10-42 மணி தொடக்கம் 1-58மணி வரையுள்ள கும்பலக்கின சுபமுகூர்த்த வேளையில் இறைவன் திருவருளால் கொக்குவில் மேற்கில் அமைந்திருக்கும் மஞ்சவனப்பதி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ள திருமண வைபவத்திற்கு தாங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்புசாரம்: 12–11–84 திங்கள் மாலை 4மணி முதல் 6 மணி வரை மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**

[தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை]
இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| **திரு. க. பரமேஸ்வரன்,** (ஓய்வுபெற்ற இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி ஊழியர்) **குடும்பத்தினர்,** 456, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். | **திருமதி கனகாம்பிகை செல்வரட்ணம்,** (காலஞ்சென்ற வெலிங்டன் தியேட்டர் முகாமையாளர், திரு. செல்வரட்ணம்] **குடும்பத்தினர்,** ''மிகுணளி'', மஞ்சவனப்பகுதி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில். |

(643)

# "எந்த ஒரு அரசியல் தேர்தலிலும் இனிமேல் போட்டியிடமாட்டேன்!

## தோல்வியடைந்த மொன்டேல் பேட்டி

வாஷிங்டன் நவ. 8

"ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது வேறு எந்த அமெரிக்கத் தேர்தல்களிலோ நான் இனிமேல் போட்டியிடப் போவதில்லை" என்று அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் படுதோல்வியடைந்த திரு. வோல்டர் மொன்டேல் கூறினார்.



திரு. மொன்டேல் தமது தோல்வியைத் தொடர்ந்து பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. மொன்டேல் தொடர்ந்து கூறியதாவது: ''நான் தோற்றுவிட்டேன். திரு. றீகன் வெற்றிபெற்றுவிட்டார் எது எப்படியானாலும் நாம் எல்லோரும் அமெரிக்கர்கள். இப்போது திரு. றீகன் எமது ஜனாதிபதி. அவருக்கு நாம் கௌரவமளிக்க வேண்டும். சகல அமெரிக்கர்களும் அவரை கௌரவித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்'' என்றார்.

திரு. றீகன் தமது வெற்றியையடுத்து பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் கூறியதாவது: ''அமெரிக்கர்கள் என்னை மீண்டும் தெரிவு செய்துள்ளார்கள். இந்த வெற்றியை எனது பணிக்கு மக்கள் கொடுத்த ஒத்துழைப்பு என்றே குறிப்பிடுவேன்.

அமெரிக்கர்கள் புதிய பட்ஜட்டில் வரிகள் அதிகரிக்கப்படலாம் என அஞ்சுகிறார்கள். ஆனால் எந்த வகையிலும் வரிகளை உயர்த்திச் சுமைகளை ஏற்படுத்தமாட்டேன். வரவு செலவுத் திட்டத்தில் செலவு நிலையைச் சமாளிக்க வரிவிதிப்புக்குப் பதிலாக வேறு வழிகளில் நிதிவரவுக்கான ஏற்பாடுகளைச் செய்வேன்'' என்றார்.

இதேவேளை திரு. றீகனின் இம்மாபெரும் வெற்றி இரண்டாம் உலகப் போர் காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த திரு. பிராங்ளின ரூஸ்வெல்ட் பெற்ற மாபெரும் வெற்றிக்குப் பின்னர் கிடைத்த ஒரு பெரும் வெற்றி என்று கூறப்பட்டது. (கி)

## மொன்டேல் மாநில நிபுணர் எம். ஜி. ஆருக்கு சிகிச்சை!

நியுயோர்க், நவ 8

நியுயோர்க் 'புறூக்லின்' வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரனை அமெரிக்காவின் மின்னசொட்டா மாநிலத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர் டாக்டர் ரஜாரின் நேற்றுப் பார்வையிட்டார்.

டாக்டர் ரஜனின் சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை நிபுணராவார் எம். ஜி. ராமச்சந்திரனின் உடல்நிலை மிகவும் திருப்திகரமாக சீரடைந்து வருகின்றது. ஆகையினால் அவருக்கு சிறுநீரகமாற்றுச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளக்கூடிய நிலை தற்போது காணப்படுகின்றது. டாக்டர் ரஜாரின் புறூக்லின் மருத்துவமனை நிபுணர்களுடன் இச்சிகிச்சை மேற்கொள்வதுபற்றியே ஆராய்ந்தார்.

இன்னும் இருவார காலத்தில் இச் சத்திரசிகிச்சை நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வைத்திய நிபுணர் டாக்டர் ரஜாரின் மின்னசொட்டா மாநிலத்தைச் சேர்ந்தவர். இம் மாநிலமே தற்போது அமெரிக்காவில் பெருமளவு பேச்சில் அடிபட்டுவருகின்றது. ஏனெனில் இம்மாநிலம் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த திரு வோல்ட்டர் மொன்டேலின் சொந்த மாநிலமாகும் இங்குமட்டுமே அவர் கூடுதல் வெற்றிபெற்றுள்ளார். (கி)

## விண்வெளி பயணத்துக்கு அமெரிக்க அரசியல்வாதி!

ஹூஸ்டன், நவ. 8

விண்வெளிக்கு வருமாறு செனட்டரான அமெரிக்க அரசியல் வாதி ஒருவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பை அமெரிக்க விண்வெளி நிறுவனம் 'நாஸா' விடுத்தது.

விண்வெளிக்குச் செல்லவுள்ள விண்வெளி விமானத்திலேயே அந்த செனட்டரும் ஒரு விண்வெளிப் பயணியாக சேரும்படி கேட்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி அந்த செனட்டரிடம் கேட்கப்பட்டபோது, தாமே விண்வெளி செல்லவுள்ள முதலாவது அரசியல் வாதியாக இருக்கமுடியுமென்றும், தமது பயணம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்குள் இடம்பெறலாமென்றும், தாம் இன்னும் இருவாரத்தில் விண்வெளிப் பயணப் பயிற்சிகளில் இறங்கப் போவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்தடவை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் நியமனத்துக்கான போட்டியில் முன்னாள் விண்வெளிவீரர் ஒருவர் போட்டியிட்டுத் தோல்விகண்டது குறிப்பிடத்தக்கது. (கி)

## பிலிப்பைன்ஸில் கடும் சூறுவளி 400 பேர்பலி!

மணிலா, நவ 8

பிலிப்பைன்ஸில் கடந்த திங்கட்கிழமை வீசிய கடும் சூறுவளியினால் 400 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானவர் உடமைகளைப் பறிகொடுத்தனர்.

இந்த சூறுவளியைத் தொடர்ந்து பெரும் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டது. இதனால் மக்கள் உயர்ந்த கட்டடங்களின் கூரைகள்மீது தஞ்சம் புகுந்துள்ளனர்.

கடற்படை விமானங்கள், கப்பல்கள் ஆகியன மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. இப் பெரும் சூறுவளி பசுபிக் கடல் பகுதியிலிருந்து வீசியதாகவும், தென் சீனக்கடல் கொந்தளிப்பாலேயே வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. (கி)


உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது

'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605






வெளிநாடு செல்வதற்கு

✶ விமான டிக்கட்:
விசேட கட்டணத்தில் லண்டன், பரீஸ், சிங்கப்பூர், மலேசியா
SPECIAL FARE TO LONDON, PARIS, SINGAPORE AND MALAYSIA
Attractive fares to European Countries U. S. A., Canada and Australia.

✶ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
வார நாட்களில் காலை 8.30 முதல் 4 30 வரையும், சனிக்கிழமைகளில் காலை 9-00 முதல் நண்பகல் 12-00 வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30 ON WEEK DAYS AND ON SATURDAYS BETWEEN 9-00 A.M. — 12-00 NOON

✶ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

மக்கினேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92 போன்: 24154

### மணிவாக்கு

சோஷலிச முயற்சி, பொருளாதார சுபிட்சத்துக்கு மட்டுமன்றி, சமுதாய மறுமலர்ச்சிக்கும் அடிகோலும் என்பது எனது நம்பிக்கை.

— ஜவஹர்லால் நேரு.

## நமது நோக்கு

# வாழும் தத்துவம்

பூவுலகில் இவ்வாரம் மக்கள் அமளிப்படுவது மூன்று விடயங்கள் பற்றி; இந்திராவின் அஸ்தி, நாற்பத்தோராவது அமெரிக்க ஜனாதிபதியின் வெற்றி, ரஷ்யாவின் அறுபத்தேழாவது அக்டோபர் புரட்சி.

இம் மூன்று விடயங்களும் வேறுபட்டவை போல் தோன்றினாலும் அகில உலகுக்கும் ஒற்றுமைப் பட்ட கருத்தை உணர்த்த வல்லவை.

எங்கள் 'விண்ணுலக' விசேட நிருபர் குறிப்பிடும் செய்தியை நாம் பிரசுரிக்காது அதனை இன்றைய ஆசிரியத் தலையங்கத்துள் அடக்குவதே உசிதமென நினைக்கின்றோம்.

இந்த அணுசக்தி யுகத்தில் அமரத்துவம் அடைந்த இந்திரா விண்ணுலகடைந்ததும் அங்கு நடைபெற்ற விசேட உபசாரத்துக்கு விருந்தினராக அழைக்கப்பட்டதும் ஒரு வாரத்தில் முடிவடைந்த நிகழ்ச்சி.

தந்தை நேரு தம்முடைய தனிமகளை வரவேற்றபோது பிரசன்னமாயிருந்த மண்ணுலக முன்னைநாள் முப்பெருந் தலைவர்கள் அமெரிக்காவின் ஆபிரகாம்லிங்கன், சோவியத் ரஷ்யாவின் லெனின், பாரத நாட்டின் பிதா மகாத்மாகாந்தி. விண்ணுலகென்றபோதும், மண்ணுலகவைபவம்போல் சிறப்பாகவும், மிக எளிமையாகவும் இந்த உபசாரம் நடந்ததாக நமது 'நிருபர்' குறிப்பிடுகிறார்.

''வெற்றி வெற்றி என் வீரமகளே!'' என்று முத்தமிட்ட தந்தை நேருவின் கண்களிலும் எங்கள் அன்னை இந்திராவின் கண்களிலும் காணப்பட்ட கண்ணீர் ஆனந்தக் கண்ணீரென்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இந்தஏகோபித்ததீர்ப்பை வழங்கியவர்கள் அங்கு பிரசன்னமாயிருந்த மும்மூர்த்திகள்— லிங்கன், லெனின், காந்தி.

கண்ணீரில் ஆனந்தம் காண்பது விண்ணுலகத்தவருக்கு சிரமம்; பூஉலகத்தவருக்கு இலேசு; காரணம் விண்ணுலகம் ஆனந்த வாழ்வுக்கு நிரந்தரமானது. அங்கு கண்ணீருக்கே இடமில்லை. என்றுமே இன்பமாக வாழும் இம் மும்மூர்த்திகள் முதாலாளித்துவம், கம்யூனிசம், ஜனநாயகம், சோஷலிசம் என்ற போர்க் கொடிகளை அங்கு காணமுடியாத அமைதிப் பறவைகள்.

எனவே நேரு நடத்திய உபசார விழாவில் கண்ணீர் (சோகமோ, இன்பமோ)ஒரு புதுமை. ஆனால் அதன் காரணத்தை அறியவல்ல இம் 'மானிட தெய்வங்கள்' மண்ணுலகை விட்டு உடனடியாக விண்ணுலகில் தந்தையைச் சந்திக்கும் பாக்கியம் பெற்ற இந்திராவிற்கு, இதனைப் புறநடையாகக் கொள்ளும் பெருமனம் படைத்தவர்கள்.

இந்திராவின் 'வெற்றி' பற்றி நடந்த கருத்துப் பரிமாறல் எமது 'நிருபரின்' செய்தியில் முதன்மைபெறுகின்றது.

ஆபிரகாம் லிங்கன்வெளியிட்ட கருத்து: ''நான் ஜனநாயகத்திற்கு வரைவிலக்கணம் வழங்கியபோதுபடுக்கையில் உயிர் விடுவேன் என்று நம்பவில்லை: அதற்காகத் தியேட்டருக்குச் செல்லாதுகூடதற்காய்வதா?' என்று வினவினர்.

''மக்களின் நன்மை கருதிய ஆட்சி, மக்களுக்குரிய ஆட்சி, மக்களால் நடத்தப்படும் ஆட்சி இம்மூன்றிலும் கடைசியானது உருவாக ஊழிகாலம் எடுக்கும்'' என்று முடித்தார் லிங்கன்.

''நாமிங்கு வந்த காலந் தொட்டு தொழிலாளியின் சுவர்க்க வாழ்வை அனுபவித்து வருவதால் வாழ்வு சாவு என்ற பேதமே இல்லை. தாங்கள் குறிப்பிட்டது போல், மக்கள் நடத்தும் ஆட்சியும், உண்மை ஜனநாயகமும், இவ்விரண்டும் ஒன்றே; மண்ணுலகில் இன்று வெற்றி கொண்டாடும் ஜனாதிபதி றீகனும், எமது மாஜி நாட்டின், 67 ஆவது புரட்சி விழாக்காரரும் இதனை இன்னும் உணரவில்லை'' என்று முடித்தார் மானிட வர்க்கத்தின்விடுதலைக்காக இங்கு உழைத்த மாபெரும் தியாகி லெனின்.

பல்லில்லா உதட்டினால் புன்முறுவல் செய்த காந்தி இந்தப் பேருண்மையை மண்ணுலக மக்கள் இலகுவில் உணர்ந்து விடுவார் என்று நம்பி நான் மோசம் போனதில்லை. ஒரு ரகசியத்தை வெளியிடுகிறேன்; எனது துப்பாக்கி மரணத்தைநானே வருவித்தேன். வரவேற்றேன்'' என்று கொல்லெனச்சிரித்தார். 'ஹேராம' என்றதற்கு வேறென்ன அர்த்தம் என்றுமுடிவு கட்டினார் காந்தி.

இம்மூன்று விண்ணுலகப் பிரமுகர்களுக்கும் நன்றி தெரிவித்துப்பேசிய உபசார அழைப்பினர்நேரு, ''எனது அரும் புத்திரி என்னையும் வென்றுவிட்டார் என்பது உண்மை. தகப்பனும் பிள்ளையுமென்றாலும் வாயும் வயிறும் வேறென்பது மண்ணுலக சித்தாந்தம், பொறுமைக்கும் போட்டிக்கும் இங்கு இடமில்லை; லிங்கனுக்கும் காந்திக்கும் கிடைத்த வரம் எனது மகளுக்கே கிடைத்தது'' என்று பெருமிதப்பட்டார்.

வறுமையைப் போக்குவதற்கும், மனித சமத்துவத்தை நிலைநிறுத்துவதற்கும் ஒரு அமைதிவழியான மார்க்கமே இன்று உலகுக்கு அவசியம். இதற்கு என்ன பெயர் இட்டாலும் இன்று நிலவும் கெடுபிடிப் போர் நீங்க இந்திராவின் அஸ்தியும், றீகனின் வெற்றியும், அக்டோபர் புரட்சியும், ''வாழும் தத்துவம்'' ஒன்றையே குறிக்கின்றன; இந்த ஞானம் நாம் இங்கு குறிப்பிட்ட செய்தியில் பரிணமிக்கின்றது.

'யாவும் கற்பனையே' என்று அலட்சியம் செய்வது ஆபத்து.

## இலங்கை தமிழ் அகதிகள்: சுவிஸ்முடிவுகுறித்து

## மனிதஉரிமை,அகதிகள்ஸ்தாபனம் அதிர்ச்சி

கடந்த வருடம் ஜூலைமாதத்தில் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தை அடுத்து சுவிஸ்சர்லாந்தில் அரசியல்புகலிடம் கோரியுள்ள 1,700 தமிழ் இளைஞர்களையும் இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்ப வேண்டும் என்று சுவிஸ் அரசாங்கம் எடுத்த தீர்மானத்தையிட்டு ஐரோப்பிய நாடுகளிலுள்ள மனித உரிமைகள் இயக்கங்களும் அகதிகள் ஸ்தாபனங்களும்பெரும் கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளன எனத் தெரியவந்துள்ளது.

சுவிஸ் அரசாங்கத்தின் உதாரணத்தைப் பின் பற்றி ஏனைய ஐரோப்பிய அரசுகளும் இவ்வாறான முடிவுகளைச் சில சமயங்களில் எடுக்க நேரிடலாம் என்று மேற்படி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் அஞ்சுவதாகவும் தெரிகின்றது.

இனக்கலவரத்தினை யடுத்து சுமார் 30,000 தமிழ் இளைஞர்கள் கடந்த வருடம் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் அவர்களுள் சுமார் 28 300 பேர் பிரிட்டனுக்குச் சென்றனர் எனவும் அத்தொகையில் சுமார் 226 பேர் மட்டுமே பிரிட்டனில் அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பம் செய்தனர் எனவும் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகிறது.

**க. ஜீவகதாஸ்**

ஏனையோருள் சுமார் 6000 முதல் 7000 வரையிலான தமிழ் இளைஞர்கள் மேற்கு ஜேர்மனியில் அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பித்திருப்பதாகவும் அதேபோல சுமார் 2000 பேர் பிரான்ஸில் புகலிடம் கோரியுள்ளனர். எனவும் அறியப்படுகிறது.

இத் தமிழ் இளைஞர்களின் விடயத்தில் சுவிஸ் அரசு எடுக்கின்ற இறுதிமுடிவை ஏனைய ஐரோப்பிய அரசுகள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகத் தெரிகின்றது.

அதேவேளை, இலங்கையில் தமிழர் பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வு ஏற்படுகின்ற வரைக்கும் ஐரோப்பிய நாடுகளில் அரசியல் புகலிடம்கோரியுள்ள தமிழ் இளைஞர்களை அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்புகின்ற முயற்சிகளில் ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்கள் இறங்கக்கூடாதென, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஸ்தானிகர் இவ் வருடம் தை மாதம் ப்த்தாம் திகதி ஐரோப்பிய நாடுகளின் அரசுகளையும் வேண்டியிருந்தார் எனவும் அவ்வாறான மற்றுமொரு வேண்டுகோளும், மீண்டும் இவ்வருடம் மே மாதம் 1-ம் திகதியன்று இவ் அரசாங்கங்களுக்கு விடுக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

இவ்வாறு இருந்தபோதிலும் கூட, சுவிற்சர்லாந்தில் இருக்கின்ற 1,700 தமிழ் இளைஞர்களுள் இதுவரை 200 பேர்களது புகலிட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது. அவ்வாறு நிராகரிக்கப்பட்டிருக்கும் 200 தமிழ் இளைஞர்களும் அரசியல் அகதிகளாக அங்கீகரிக்கப்படமாட்டார்களாம்.

## தேசிய சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 981-வது இலக்க தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு:

**20 D 0002**

ரூ. 2 லட்சம்

2-ம் பரிசு:

**06 V 0983**

ரூ. 75,000

3-ம் பரிசு:

**12 O 0116**

ரூ. 25,000

தலா ரூ. 1,387·50 சதம் ஆறுதல் பரிசு பெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 08 A 0272 | 15 A 0059 |
| 16 A 0784 | 19 A 0170 |
| 22 B 0725 | 07 C 0548 |
| 08 C 0672 | 11 C 0530 |
| 12 C 0320 | 19 C 0549 |
| 05 D 0983 | 06 D 0539 |
| 08 D 0795 | 01 E 0376 |
| 03 E 0302 | 02 F 0832 |
| 03 F 0563 | 09 F 0409 |
| 14 F 0380 | 18 F 0115 |
| 18 F 0839 | 23 F 0 90 |
| 01 G 0584 | 15 G 0997 |
| 18 G 0186 | 10 H 0858 |
| 10 H 0970 | 12 H 0932 |
| 16 H 0136 | 22 H 0398 |
| 23 H 0988 | 05 J 0316 |
| 13 J 0255 | 17 J 0483 |
| 20 J 0293 | 22 J 0083 |
| 05 K 0511 | 11 K 0754 |
| 22 K 0589 | 05 L 0021 |
| 09 L 0567 | 17 L 0183 |
| 04 M 0651 | 06 M 0493 |
| 08 M 0220 | 09 M 0360 |
| 10 M 0463 | 21 M 0045 |
| 22 M 0926 | 03 N 0956 |
| 12 N 0220 | 01 O 0869 |
| 06 O 0540 | 11 O 0112 |
| 11 O 0758 | 12 O 0701 |
| 18 O 0653 | 20 O 0148 |
| 02 P 0401 | 13 P 0879 |
| 17 P 0834 | 22 P 0819 |
| 02 Q 0507 | 03 Q 0273 |
| 07 Q 0431 | 09 Q 0972 |
| 20 Q 0691 | 02 R 0467 |
| 05 R 0012 | 07 R 0895 |
| 10 R 0039 | 12 R 0990 |
| 15 R 0919 | 05 S 0862 |
| 10 S 0750 | 12 S 0191 |
| 22 T 0508 | 23 T 0084 |
| 07 U 0312 | 13 U 0052 |
| 01 V 0886 | 04 V 0576 |
| 10 V 0362 | 16 V 0538 |
| 18 V 0836 | 22 V 0948 |
| 15 W 0202 | |
| 02 X 0464 | 04 X 0748 |
| 22 X 0246 | 23 Y 0117 |
| 07 Y 0201 | 11 Y 0004 |
| 11 Y 0278 | 22 Y 0754 |
| 03 Z 0746 | 14 Z 0100 |
| 16 Z 0714 | 17 Z 0112 |
| 19 Z 0948 | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை)

### இன்று முதலாவது நினைவுதினம்:

# நாவலர் சபையின் காரணர் இளையதம்பி

**பண்டிதர் மு.கந்தையா**

ஈழத்தில் சைவத் தமிழ்கலாசாரப் புனிதம்பெற்ற பிரதேசங்களில் தொன்மை மேன்மை வாய்ந்த பகுதி கரம்பொன், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சைவ ஒழுக்க சீலங்களையும், தர்மப்பணி மரபுகளையும் அச்சொட்டாகத் தழுவி வாழ்ந்த ஆன்றோர்களின் சுவடுகள் மலிந்துள்ளது இப்பகுதி. நாவலர்க்குப் பின் அவர்தம் சைவத் தமிழ் சேவைத் தொண்டுக்கு உபவிளக்கமாய் ஒளிர்ந்து சிவகுருநாத பீடமமைத்து ஆத்மஞானச் சுடரொளி பரப்பிய மாண்புமிகு மகாதேவ சுவாமிகளின் ஜன்மபதி இது. தமிழரின் உயிர்க்கலையாகிய சிற்பக் கலையாராய்ச்சியைச் சிறப்பித்து சைவஞான விற்பன்னராய், சிவபூஜாதுரந்தரராய் சிவயோக சுவாமிகளின் ஆப்தராய் விளங்கிக் கலாநிலைய மூலம் கலையொளி பரப்பிய கலைப்புலவர் நவரத்தினத்தை ஈன்றதும் இப்பதியே.

நிலவளம் காட்டும் பயிர் வளம் போல இத்தகைய ஆத்திகப் பின்னணிக்குரிய நலமெல்லாம் தம்மிற் பிரதிபலிக்க கரம்பொனில் தோன்றியவர் திரு. க. இளையதம்பி.

தம் தாய்மொழிமீதும் சமயத்தின் மீதும் அபிமானம் கொள்ளாதவர் வாழ்வும் ஒரு வாழ்வா? என்ற உள்ளக் குமுறலை உதிர்த்தவர், தமிழ்வள்ளல் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை. இதே உள்ளக்குமுறலால் உத்வேகங் கொண்டெழுந்துழைத்தவர்

(5-ம் பக்கம் 4ம் கலம்பார்க்க)

# இன்றைய வெள்ளியின் சிறப்பு

புண்ணிய காலங்கள் மிக அருமையானவை. மாசிமாதம் 29ம் திகதி பிறந்தவர்களுக்கு வருடம் தோறும் பிறந்தநாள் வராது. இதேபோன்று சில புண்ணிய காலங்கள் நியமம் தப்புவதும் உண்டு. கந்தசஷ்டி 5 நாளாவது புண்ணியக் குறைவான நியதியாகவே கருதத்தக்க தாகும்.

இம் முறை ஐப்பசிக்கடைசி வெள்ளிக்கிழமை விரதம் அனுட்டிக்கும் அடியார்களுக்குக் கார்த்திகை விரதமிருக்கும் வாய்ப்பும் கார்த்திகை விரதமிருந்து வணங்குபவர்க்கு ஐப்பசி வெள்ளிக்கிழமை விரத பலனும் உண்டாகும். வகையில் இரு விரதநாள் ஒன்றாக வந்துவிட்டன.

தீபாவளிக் கொண்டாட்டத்திலன்றே ஒருவனுக்குப் பிறந்த நாட்கொண்டாட்டமும் சேர்பவனுக்கு மகிழ்ச்சி இரட்டிப்பாவதைப் போன்றும் விடுதலை நாளில் வேலைசெய்யும் தொழிலாளி ஒருவனுக்கு மேலதிகச் சம்பளம் கிடைப்பது போன்றும் புண்ணியத்தை அதிகமாகக் கிடைக்கச் செய்யும் அரிய புண்ணியதினமாக இவ் வருட ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமையில் கார்த்திகை விரதமும் வந்திருக்கின்றது.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாய் வணங்க இனிய கடவுளான முருகனின் இரண்டு விரதங்கள் சங்கமித்த இத்தினத்தில் யமசங்கார விழாவும் சேர்கின்றது.

மார்க்கண்டர்க்காக மறலி (யமன்) பட்டபாட்டை உன்னிப்பார்க்கின் அன்பர்க்கு என்ன பயம்? என்றுதாயுமானவர் கேட்டபடி சிவபிரான் தன்னடியவனுக்கு யமபயத்தைப் போக்கிய அருட்செயலை நினைவுபடுத்தும் புனிததினமாக இத்தினம் விளங்குகின்றது.

யமசங்கார அகக்கடவுளை

[5ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

# திருமண அழைப்பு

மணமகன்: **செல்வன் இராசலிங்கம்**
(இலங்கைப் போக்கு வரத்துச்சபை, கோண்டாவில்)
மணமகள்: **செல்வி இந்திரலீலா**
(இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)
காலம்: **11-11-1984**
சுபநேரம்: காலை 10-42 மணிமுதல் பகல் 01-59வரை
இடம்: நல்லூர் சிவன் கோவில்

உறவினர், நண்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

நல்வரவை நாடும்

திரு. மு. துரைராசா. (முன்னாள் பத்திரிகை ஏஜன்ட்) (மணமகனின் தந்தை) ''சண்முக வாசா'' மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.

திரு. திருமதி கந்தையா, (மணமகளின் பெற்றோர்) ''கமல பவனம்'' 28/36, மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

615

உ

# திருமண அழைப்பு

மணமகன்:
**திருநிறை செல்வன் கணேசநாதன்**
மணமகள்;
**திருநிறை செல்வி ஆனந்தி**

முகூர்த்தம்
11-11-1984 ஞாயிறு பிற்பகல் 12 மணி 40 நிமிஷம்
தொடக்கம் 1 மணி 30 நிமிஷம் வரை
திருமங்கல்யதாரணம்: மணமகள் இல்லம்
திருமண வைபவத்தில் பங்கு பற்றி
மணமக்களை வாழ்த்துவதுடன்
12-11-1984 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி
தொடக்கம் மணமகன் இல்லத்தில் இடம்பெறும்
வரவேற்புபசார வைபவத்திலும்
கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார் உறவினர் நண்பர்களை
அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி த. வேலுப்பிள்ளை, (மணமகனின் தாயார்) ''அம்பாள் இல்லம்'', மானிப்பாய் வீதி, உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

திரு. செ. பஞ்சலிங்கம், [கமநல சேவை நிலையம், முல்லைத்தீவு]
திருமதி தி. பஞ்சலிங்கம், [மணமகளின் பெற்றோர்] ''திலகம்'', பலாலிவீதி, உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

வரவேற்பாளர்கள்:
திரு, திருமதி வே. சண்முகநாதன்
திரு, திருமதி செ. நாகரத்தினம்

[647]

## மன்னார் அபிவிருத்திச் சபை

# புலமைப் பரிசில் வழங்கல்

1984 இல் பல்கலைக்கழகம் புகத் தகுதி பெற்ற மாணவர்களிடமிருந்து மன்னார் அபிவிருத்திச் சபையினால் வழங்கப்படவிருக்கும் புலமைப் பரிசிலைப் பெறத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பிக்கும் மாணவர்கள் பின்வரும் தகமை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

01. 1984 இல் பல்கலைக்கழகம் புகுவதற்கு அனுமதி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.
02. மன்னார்மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
03. மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றிலிருந்து கல்வி பயின்றோ அல்லது மன்னார் மாவட்டத்தில் பாடசாலைக் கல்வியை முடித்துப் பிரத்தியேகமாகக் கல்வி பயின்றோ க. பொ த. (உ. த.) இல் தேறியவராக இருத்தல் வேண்டும்.

மேற்கூறியவற்றிற்காகிய அத்தாட்சிப் பத்திரங்களும் பெற்றோரின் வருமானத்தைக் காட்டும் சான்றிதழைப் பகுதி கிராமசேவை உத்தியோகத்தரிடமிருந்து பெற்று, பிரிவு உதவி அரசாங்க அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப் த்துடன் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் மன்னார் அபிவிருத்திச் சபையில் நேராகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொண்ட விண்ணப்பப் படிவத்தில் ''மாவட்டச் செயலாளர், அபிவிருத்திச் செயலகம், மன்னார்'' என்ற முகவரிக்கு 1984-11-30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

புலமைப் பரிசில் பெறத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதில் மன்னார் அபிவிருத்திச் சபையின் முடிவே இறுதியானது.

அ.ஜெ. செந்தில்நாதன்,
மாவட்டச் செயலாளர்,
மன்னார் அபிவிருத்திச் சபை.

அபிவிருத்திச் சபைச் செயலகம்,
மன்னார்.
1984-10-31. 639

## புதியயோசனை...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி) னையைத் தீர்ப்பதற்கு தொடர்ந்து ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளும் என்றுதான் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கையிலுள்ள பாதுகாப்புப்படையினர் கடந்த ஒரு வாரகாலத்தினுள் இலங்கைத் தமிழ் மக்கள் மீது மிகக் கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்'' என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

தமிழ் மக்களை அச்சுறுத்தி, இலங்கையின் இனப்பிரச்னைக்கு இராணுவரீதியாகத் தீர்வு காண இலங்கைஅரசு முயலுவதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். [சூ]

## அன்னை...

(1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி) வணபிதா எஸ். கில்லறி ஜெபநேசன், விரிவுரையாளர் ஜனாப் ஏ. எச். மஹ்றூப் திரு. பொன். மதிமுகராசா, புலவர் ஈழத்து சிவானந்தன், திரு. சசிபாரதி, திரு கே. டானியல், திரு. க. சி குலரத்தினம், திரு. அ. பொ செல்லையா, சட்டத்தரணி எஸ். கே மகேந்திரன் பொன். பூலோகசிங்கம், திரு. சு குமாரவேலு, தென்புலோலியூர் சிவா, திரு மு வெ பெ. சாமி, செல்வி க. கலைச்செல்வி ஆகியோர் உரையாற்றுவார்கள் [க]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, இல: 43/1, கொழும்புத்துறைவீதியைச் சேர்ந்தமரண சாதனமின்றி மரணித்த குருசுமுக்து அந்தோனிப் பிள்ளையின் மரணச் சொத்து சம்பந்தப்பட்ட விடயத்தில் — மரணித்தவர்

குருசுமுத்து அந்தோனிப் பிள்ளை கைம்பெண் கிறேஸ் பிறிம்றோஸ் இராஜதேவி (நல்லையா) இல:43/1, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், — மனுதார்

இல: தத்துவம் / 3761

எதிர்

1. குருசுமுத்து கைம்பெண் அன்னம்மா,
2. ஆர் வி சிறில்,
3. பெண் ஸ்ரெல்லா,
4. எம் ஆர் லீனஸ்,
5. குருசுமுத்து இராஜேந்திரம்,
6. குருசுமுத்து மகள் புஷ்பம்
7. முத்துக்குமாரு கனகலிங்கம்,
8. பெண் கேற்றூட்,
9. குருசுமுத்து மகள் ஜசிந்தா,

குருசுமுத்து பேளுட், நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை,
— எதிர்வாதிகள் '01

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் ஆஸ்தியை நிர்வகிப்பதற்காக மேலே சொல்லப்பட்ட இலக்கமுடைய வழக்கைத் தாக்கல் செய்து அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென்று இத்தால் அறியத் தரப்படுகின்றது.

இதில் அக்கறையுடைய எவரேனும் குறித்த பின்னுறுதித் தீர்வையை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்கு தகுந்த காரணமிருப்பின் இந் நீதிமன்றத்தில் 1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ம் திகதி காலை 9-00 மணிக்கு இம் மன்றில் தோன்றி காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்
யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றம்

வரைவு
எல். பி. தம்பிராஜா,
மனுதாரின் சட்டத்தரணி
587

## கைவிலங்குடன்

[1ம்பக்க 3ம்கலத் தொடர்ச்சி] என்பவர் நேற்றுக்காலை மதிலால் ஏறிக்குதித்து தப்பிச் சென்றார்.

பல கொள்ளைச்சம்பவங்கள் தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

கைவிலங்குடன், கூண்டுக்கு வெளியில் உள்ள கம்பி ஒன்றில் பிணைக்கப்பட்டிருந்ததாகவும், இவர் கைவிலங்கை உருவிவிட்டு தப்பிச்சென்றதாகவும் கூறப்படுகிறது.

மதிலால் ஏறிக்குதித்த போது பொலிஸார் ''ஓடுகிறான்'' என்று சத்தமிட்டதாகவும், வாசலில் காவலுக்கு நின்ற பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுறறது.

தப்பிச்சென்றநபரை பொலிஸார் தேடிவருகின்றனர். [க]

## நாவலர்

[4-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க] திரு. இளையதம்பி. ஈழத்தில் தமிழ்மொழியுபயோகச் சட்டத்தைச் சரியாக நடைமுறைப்படுத்துவிக்கப் பகீரதப் பிரயத்தனங்களில் இறங்கினார். அவ்வகையில் அதுபற்றி அலட்சிய மனப்பான்மையோடிருந்த அரசாங்கத்துறைகளுக்கு மட்டுமன்றி அவ்வப்போது பாராமுகமாயிருந்த தலைவர்களுக்குந்தான் ஒரு சிம்மசொப்பனமாக உயிர்த்தெழுந்தார் அவர். அதன் பிரதிபலிப்பாக எழுந்து விளாசிய ஒருநடைமுறை இயக்கமே நடைமுறைத்தமிழ் இயக்கம்.

'தமிழன் தமிழைப் போற்றினால் தரணி தமிழனைப் போற்றும்' என்பது இவ் இயக்கத்தின் மேற்கோள். இதே இயக்கத்திலேயே நாவலர்சபை கருக்கட்டியதும், ''நடைமுறைத் தமிழியக்கம் நாவலர் சபையின் தாய்'' என அழைக்கப்பட்டு (20-8-69)சிந்தாமணி மணிமகுடத் தீயிட்டிருந்தது.

நாவலர் மகிமைவிலாசங்கள் பற்றிச் சுவாரஸ்யமாகப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையோடு விசேட உறவுஞ் செறிவுங் கொண்டிருந்தார் இளையதம்பி.

ஆரம்பபாடசாலை ஐந்தாம் தரம்மட்டுமே படிப்பு. தொழிலும் வியாபார நிலையமொன்றில் சாதாரண மனேஜர் தொழில். பொதுமதிப்பீட்டில் இளையதம்பியின் பெரும் பரும் எடுப்புகளுக்குக் கிட்டவும் எட்சாத சூழ்நிலை. ஆனால் நடைமுறையிற் கண்டவை இவற்றுக்குஎதிர்மாறாகப் பிரதிபலிக்கும். அவ்வகையில் ஒரு அதிசய புருஷர் இளையதம்பி. உண்மையில் பற்றும், உள்ளுணர் வாற்றலும் உணர்ச்சி வளமும் நிரம்பிய உத்தம புருஷர் அவர்.

## இலங்கைத் தமிழர்

(1-ம் பக்க2ம்கலத்தொடர்ச்சி) திரு. எம். சிவசிதம்பரம் இந்தியப் பிரதமர் ரு. ரஜீவ் காந்தியைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக விரிவான பேச்சுவார்த்தையொன்றைநடத்தும் பொருட்டு, கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் மீண்டும் திரு. ரஜீவ் காந்தியைச் சந்திக்கவுள்ளார். [வெ]

## வெடிமருந்து...

(1ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி

கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெடிமருந்து உரிமையாளர்கள் பயங்கரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் மீது பொலிஸார் தங்களது விசாரணைகளை உஷார்ப்படுத்தியுள்ளனர்.

## இன்றைய

(4ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி

வணங்கிச் சிவானுக்கிரகத்தைப் பெறுவதால் மரணம் தவிர்க்கப்படுமா?'' என்று சிலர் வினவிக்கேலி செய்வர். மார்க்கண்டருக்காக கொன்ற யமனைச் சிவபெருமான் உயிர்பித்ததே உலகில் பிறக்கும் ஒவ்வொரும் உயிரும் இறத்தற்குரியதுஎன்பதையே உணர்த்துகின்றது.


ஆனால் அவச்சா, விபத் மரணம், அற்பாயுளில் இறத்தல் முதலிய மரணங்களை நீக்கி நீண்ட ஆயுளுடன் வாழும் வழ்வு பெறுதற்கே கால்காலனை மிருத்யுஞ்சயனைச் சிவனை வழிபடுவதாகும்.

தமிழ் நாட்டில் உள்ள புகழ்மிக்க சிவத்தலங்களுள் ஒன்று திருக்கடவூராகும். இத் தலத்திலேயே மார்கண்டர்க்காக சிவபெருமான் யமனை உதைத்தார். இத் தலத்திலேயே யமசங்காரத்திருவிழா நடைபெறும் நாள் ஐப்பசிக் கடைசிவெள்ளிக் கிழமையேயாகும். இதை அனுசரித்தே யாழ்ப்பாணத்தில் நல்லூர் சிசிவ கோவிலும் கீரிமலை விவன் கோவிலும் யமசங்கார மூான் நடை பெறுகிறுது.

வெள்ளிக்கிழமைவிரதத்தில் அதிக ஈடுபாடு கொள்ளாதவர்களையும் நல்லூருக்கு செல்லச் செய்யும் கீர்த்தியுடன் நடைபெறும்யமசங்கார விழா கடைசிவெள்ளிக் கிழமை சிவ வழிபாட்டுக்கும் உரியது என்பதை உணர்த்துகின்றது. இத்தகைய சிறப்புடையவெள்ளிக்கிழமை நம சிறந்த புண்ணிய நாளாக உள்ளது.

அருளாளன்

QUICKS ENTERPRISES
TRAVELS AND TOURS



உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!
BERLIN செல்ல
15-11-84 அல்லது 22-11-84
திகதிகளில்
பதிவு செய்ய விரும்புவோர் உடனடியாக உங்கள்
ஒருவழி விமான பயணச் சீட்டுக்களை
மிகவும் குறைந்த கட்டணம் ரூபா 14,500/- செலுத்தி
எம்மிடம் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும்.
சகல வசதிகளும் யாழ்ப்பாணத்திலிருந்தே
செய்து கொடுக்கப்படும்.
இன்றே எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்.
குயிக்ஸ் என்ரபிறைசஸ்,
533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## அருளுருவாம் அன்னை!



ஆழ்ந்து கண்ட அறிவி
னாலும்
ஓயாதுழைக்கும் உழைப்
பினாலும்
தேர்ந்து செய்யும் தியா
கத்தாலும்
ஆசியக் கண்டமெலாம்
ஒளிகண்டதுவே
தாயும்தந்தையுமாய் ஈழத்
தமிழ்
மக்களை தாங்கவந்தாயே!
வாடிவருந்தும் மன்னுயிர்
எல்லாம்
அடையும் துன்பமதில்
கலந்தாயே
பாரதம் புகழும் புண்ணிய சீலியே!
உலகம்போற்றும் அணி சேராத்தலைவியே
அருளுருவாம் அன்னை இந்திராவே.

இரா. நந்தகுமார்.

## இந்திரா எம்முள் வாழ்வாய்

இட்டமுடன் சிந்துமெனதிரத்தம் நாட்டின
இடர்துடைத்தே வாழ்வோங்கி இயக்கு
மென்றே
திட்டமுடன் சூழுரைத்த தியாகத் தாயே
திருவிடத்தில் தீயோருன்னுயிரைப் போக்கப்
பட்டதுயர் தாங்காது பதறி வீழ்ந்தே
பழுதறியா வுன்பிரிவால் பாரதத் தாய்
மட்டுமா அழுதாளிம் மாநிலத்தில்
மன்குலமே சோகத்தில் மடிந்த தம்மா.

சட்டமது அறநெறியைச் சார்ந்த தென்ற
தருமத்தைத் தழுவியிடர் தாங்கி நின்றும்
கட்டவிழ்த்து வக்கிரமக் கடையர் நீதி
கனவிலுமே கண்டறியாக் கயவர் கும்பல்
விட்டகுண்டால் நீநிலத்தில் வீழ்ந்த செய்தி
விடமனங்கள் களிப்பெய்தி வீங்கச் செய்ய
அட்டதிசை யன்புளத்தோர் அதிர்ச்சி யுற்றே
ஆழ்துயரென் கடலதனில் ஆழ்ந்தாரம்மா.

வ. மகாலிங்கம்.

## பொன்மனத்தாள் போயினளே!

பொன்மனத்தாளை எங்கள் பொன்னிற மேனி
யாளை
புவியினில் பூத்துநின்ற புதுமலர் ரோஜா தன்னை
விண்வெளி பறந்து ஆய்ந்த வெண்புறுப் பேடு
தன்னை
விஞ்ஞானத்துறை வளர்த்த வீரமிகு அன்னைதனை
அந்நியர்க்கும் அறிவுறுத்த அணுவதனை ஆக்கமுறு
அரும்பணிக்கே அர்ப்பணித்த அன்னை தனை
கனவினிலும் தேசியத்து ஒற்றுமையே கண்டவளை
கன்மனம் படைத்த நெஞ்சோர் கடுந்தணல்
சேர்த்துவிட்டார்.

ஆ. கல்யாணசுந்தரேசன்.

## ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டு வளம் (ஆங்கிலம்)
5-35 'பிளாஷ் கோர்டன்' கார்ட்டூர்ன் சித்திரம் (ஆங்கிலம்)
6-00 விளையாட்டுப்பயிற்சி (தமிழ்)
6-15 'பிக்புளூ மாபிள்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-40 மருத்துவ அறிக்கை
6-55 செய்திகள் (தமிழ்
7-15 பொம்மலாட்டம் (ஆங்கிலம்)
7-45 பொது அறிவு நிகழ்ச்சி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 கலைநிகழ்ச்சி(சிங்களம்)
9-10 இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்]
9-50 இசை நிகழ்ச்சி (தொடர்ச்சி)
10-30 உலகச் செய்திகள்
10-35 மின்சாரசபை 15வது ஆண்டு நிறைவு நிகழ்ச்சி (ஆங்கிலம்)
10-55 நிகழ்ச்சிகள் முடிவு

## ஸ்தாபகர் நினைவுதினம்

(மட்டுவில்)

மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் அதன் ஸ்தாபகரான திரு முத்து உபாத்தியாயரின் நினைவுதினம் அமைதியாகக் கொண்டாடப்பட்டது.

அதிபர் திரு ஆ. மசல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இளைப்பாறிய அதிபர் திரு படை வீரசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

## இன்றைய பலன்:

மாதம்—ஐப்பசி
திகதி—24 9-11-1984)
வாரம்—வெள்ளி
திதி—பிரதமை பின்இரவு 1-09 வரை
நக்ஷத்திரம்—பரணி காலை 7-38ன் மேல் கார்த்திகை

மேடம்:- எதிர் பாராத வகையில் பொருள் விரயமாகும் வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும் மனத்திடம் வேண்டும்.

இடபம்:- மனதில் அமைதி குன்றும் எதிரிகள் எக்காளமிடுவர் மறைந்த நினைவுகள் மீண்டும் தலை தூக்கும் உடல் நலத்தைப் பேணவும்.

மிதுனம்:- எதிர்பாராத மூலையிலிருந்து ஆபத்து உருவாகும் இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும்.

கடகம்:- எதிலும் அவசரப் போக்கைக் கடைப்பிடிப்பீர்கள் தரக்குறைவான தகவல்கள் கிடைக்கக் கூடும் சகோதரர் அவதானம் வேண்டும்.

சிங்கம்:- வாகனச்சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம் வரவிலும் திருப்தி காணப்படலாம் தாய் வழி மூலம் தரமான செய்தியும் கிடைக்கும்.

கன்னி:- அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருத்தி கிடைக்கும் ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும் படித்தவர் ஆதரவும் உண்டு.

துலாம்:- இடர்கள் பலதாக்கும் இதயத்தில் எரிமலை குமுறும் உதவி செய்யப் போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரும்.

விருச்சிகம்;- கனிவான சம்பவங்கள் இடம்பெறும் காதலருக்கு கனகுஷியான தினம் சிலருக்குத்திடீர் திருமணமும் நடைபெறும்.

தனுசு:- நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும் வியாபாரிகளாயின் பங்காளிகளிடம் பகைத்துக் கொள்ள வேண்டாம் பொருட் செலவுண்டு.

மகரம்:- பிதாவழியிலிருந்து மகிழ்ச்சி கரமான செய்திக்கு இடமுண்டு தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் ஏற்படும் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

கும்பம்:- தொழில் துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் இன்று சுப தினம்.

மீனம்:- பொருள் வரவு உபசாரம் பொழுது போக்கு இவற்றுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும்.

திருமலை
வே.ரவீந்திரன்

## புதிய கல்வித் திட்டம்

(கரவெட்டி)

அரசின் புதிய கல்வித்திட்டம் அடுத்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

இப்புதிய திட்டம் பற்றிய சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்குகள் கல்வித் திணைக்களத்தினால் ஒவ்வொரு கல்வி வட்டாரத்திலும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தத திட்டத்தின்படி அடுத்த ஆண்டு பாடசாலைக்கு முதன்முதலாக வருகின்ற மாணவர் 'முதலாம் ஆண்டு' வகுப்பில் அனுமதி பெறுவார். இவ்வாறே இரண்டாம் மூன்றும், ஆண்டுகளென ஆரம்பக்கல்வி ஐந்தாண்டுகளும் கனிஷ்டகல்வி எட்டு ஆண்டுகளும்அதன்பின்னர் பதினொரு ஆண்டுகளும் புகுமுகப்பரீட்சை பதின்மூன்றாது ஆண்டிலும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய பாடத்திட்டத்தில் விஞ்ஞானக் கல்விக்கு, விஞ்ஞான ரீதியான ஆய்வுகளுக்கு முதலாம் ஆண்டிலிருந்தே வசதிகளும் சூழற் பாடம்' அழகியற் கல்வி(சங்கீதம், சித்திரம், நடனம் என்பன)

ஆகியவற்றுக்கு முதன்மையும் அளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணத்தில் பின்பலம்கொண்ட ஒரே நிதிநிறுவனம்

முதலீட்டாளர்கள் தாம் விரும்பும்போதெல்லாம், வட்டியையும் பணத்தையும் இலகுவாக சிரமமின்றிப் பெறும் வசதிகொண்ட நிறுவனம்

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.

மிகக்கூடிய வட்டி — நிலையான பாதுகாப்பு 33 1/3% வட்டியை நாமே வழங்குகின்றோம்.

மத்திய வங்கியின் அங்கிகாரம் பெற்ற மகாராஜா வைப்புச்சான்றிதழ்
உங்கள் பணத்தை இரட்டிப்பாக்கும்.

50,000 ரூபாய் 36 மாதங்கள் 1,00,000 ரூபாய்

| செலுத்தும் தொகை | மகாராஜா வைப்புச் சான்றிதழ் | வட்டி வீதம் |
|---|---|---|
| ரூபா 2500 | ரூபா 5000 | 33 1/3 |
| ரூபா 5000 | ரூபா 10000 | 33 1/3 |
| ரூபா 25000 | ரூபா 50000 | 33 1/3 |
| ரூபா 50000 | ரூபா 1,00,000 | 33 1/3 |

இத்திட்டம் பற்றி
அறிய
முகாமையாளரைச்
சந்தியுங்கள்

மகாராஜா முதலீட்டு நிதிநிறுவனம்
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24267
தலைமையகம்: கொழும்பு – கிளைகள் – கொழும்பு – கண்டி

**ராணி** (யாழ்ப்பாணம்)
சிவாஜியின்
**நிச்சயதாம்பூலம்**
தினசரி 3 காட்சிகள்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30
சிவகுமார்-சரிதா நடித்த
**வண்டிச்சக்கரம்**

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
George C. Scott.. ...
**TAPS**
இராணுவவீரர்களின் போர் முறையும், பயிற்சித் திறமையும் கண்டு களியுங்கள்.

**ராஜா** (யாழ். நகர்)
Daily 10-30, 2-30, 4-30
HERBIE GOES TO BANANA
(Color)
A Full Lenth of Commedy Film
(முழுநீள சிரிப்புப் படம்)

**ஹரன்** (யாழ். நகர்)
10-30, 2-30,
4-30, 6-30
குறிப்பிட்டசில தினங்கள் மட்டும்
BLOOD OF THE DRAGON
(பயங்கர சண்டைகள் நிறைந்த படம்)

**லிடோ** சினிமா
Daily 4 Shows
CONAN THE BARBARION

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45
Lee Marvin in
THE BIG RED ONE
(Adults Only)

**வின்ஸர்** (யாழ்)
10.30, 2.00, 4 30, 6.45
**The Body**
(புத்தம் புதிய பிரதி)
வயதுவந்தவர்களுக்கு மட்டும்
பாலியல் கல்வியை வாலிபர் முதல் வயது வந்தோர் வரை படித்துணர வேண்டிய அவசியமான திரை ஓவியம். இதுவே கடைசிமுறையாக குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டும் காண்பிக்கப்படுகிறது.

**மனோகரா** (யாழ்நகர்)
இன்று முதல்
மகத்தான வெளியீடு
முரளி-குயிலி-Y. விஜயா
கல்லாப் பெட்டி-சிங்காரம்
K. பாலச்சந்தரின்
**பூவிலங்கு**
தந்தையின் செல்வாக்கை பயன்படுத்தி ஒரு ஏழைப் பெண்ணின் சர்வகலாசாலை படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் அந்த முற்கோபக்காரனை அவள் திருத்த முனைந்தாளா?
மிகுதி வெண்திரையில்.

## நாளைய உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மரணத்தையொட்டி, பின்போடப் பட்ட யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப் பட்ட 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டி மீண்டும் நாளை ஆரம்பமாகின்றது.

அரியாலை ஐக்கிய சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் நாளைய அரைஇறுதிப் போட்டியில் கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் ''பாடும்மீன்'' கழகம் மோதும். 2 -வது போட்டியில் 'கிறீன்பீல்ட்' கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகம் மோதும்.

இப் போட்டிகளில் வெற்றி பெறும் கழகங்கள் ஞாயிற்றுக் கிழமை இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளும். இவ் இறுதிப் போட்டிக்கு, முன்னாள் உதைபந்தாட்ட வீரரும், தற்போது யாழ். பரியோவான் கல்லூரி ஆசிரியருமான திரு. எஸ். கே. மகாலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். [வி]

## நல்லூர்...

(2ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

ளனர். இதனால் யாழ். மாவட்டத்தில் நல்லூர் கல்வி வட்டாரம் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளது

அகில இலங்கை தேசிய ரீதியில் ஆகக்கூடுதலான புள்ளிகளை நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை மாணவனும், இரண்டாவது கூடுதலான புள்ளியை யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவனும் பெற்றுள்ளனர்.

# இருஇளைஞர்கள் விடுதலை!

(மட்டக்களப்பு)

தங்காலை சிறையில் கடந்த ஒருவருட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர்கள் வெலிக்கடையில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைச் சபைகளின் முன் விசாரணை செய்யப்பட்டு நிரபராதிகளாக காணப்படும் பட்சத்தில் விடுதலை செய்யப்படுகின்றார்கள்.

இவ் விசாரணைகளின் போது விசாரிக்கப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறாக இன்னும் சில இளைஞர்கள் இந்த ஆலோசனை சபைகளின் முன் விசாரணை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
6 — 01 — 1936



மறைவு
10 — 10 — 1984

**திரு. கிருஷ்ணசாமி சிவசுப்பிரமணியம்**

(ஆசிரிய ஆலோசகர்)

அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்விற்கோர் வழிகாட்டியாயும் எங்களை வாழவைத்த குடும்பவிளக்கே! வாழ்வார் உள்ளங்களில் ஒளிவிளக்காகி எங்களைவிட்டுப்பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகல மாட்டா. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைவேண்டி நிற்கின்றோம்.

உங்கள்பிரிவால் துயருறும்
அன்புமனைவி, பிள்ளைகள்
50, அரசடி ரோட்
வண்ணார்பண்ணை
(649)

### வவுனியா அபிவிருத்திச் சபை

## கேள்வி அறிவித்தல்

### இறைச்சிக்கடைகள், சந்தைகள் குத்தகை—1985

வவுனியா அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையிலுள்ள இறைச்சிக்கடைகள், சந்தைகள் 01-01-85 தொடக்கம் 31-12-85வரையான காலப்பகுதிக்கு குத்தகையில் விடுவதற்கு கேள்விகள் அழைக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்தி சம்பந்தப்பட்ட உபஅலுவலகங்களில் 29-11-84 நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் ஒரு பிரதி மாவட்ட செயலாளருக்கும் அடுத்த பிரதி உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கும் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு பதிவுத்தபாலில் 30-11-84 பி. ப. 3-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல்வேண்டும். கேள்விகள் 30-11-84 பி. ப- 3-00 மணிக்கு உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம். கேள்விகளை ஏற்றல், நிராகரித்தல் விடயத்தில் மாவட்டச் செயலாளரின் தீர்ப்பே இறுதியானதாகும் சித்திபெற்ற கேள்விக்காரர் கேள்வித் தொகையில் 1/3 பங்கை உடன் காசாகச் செலுத்தத் தயாராக இருக்கவேண்டும். வேறு தேவையான விபரங்களை கந்தோர் அலுவலக நேரங்களில் சம்பந்தப்பட்ட உபஅலுவலகங்களில் அறிந்துகொள்ளலாம்.

| உபஅலுவலகம் | விபரம் | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடிய) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாத) | அங்கீகரிக்கக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| **இறைச்சிக் கடைகள்** | | | | |
| மேல்பற்று கிழக்கு நெடுங்கேணி | நெடுங்கேணி இறைச்சிக்கடை | 100/- | 50/- | 3500/- |
| சின்னச்செட்டிகுளம் கிழக்கு, செட்டிகுளம் | மாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 100/- | 25/- | 600/- |
| ,, | செட்டிகுளம் மாட்டிறைச்சிக் கடை | 100/- | 25/- | 600/- |
| **சந்தைகள்** | | | | |
| மேல்பற்று கிழக்கு நெடுங்கேணி | நெடுங்கேணி சந்தை | 100/- | 50/- | 4500/- |
| மேல்பற்று தெற்கு நயினாமடு | நயினாமடுச் சந்தை | 50/- | 25/- | 250/- |
| சின்னச்செட்டிகுளம் கிழக்கு, செட்டிகுளம் | செட்டிகுளம் பொதுச்சந்தை | 100/- | 50/- | 3600/- |

கே. சி. லோகேஸ்வரன்,
மாவட்டச் செயலாளர்,
அபிவிருத்திச் சபை, வவுனியா.

அபிவிருத்திச் செயலகம்,
வவுனியா, 01-11-1984

(638)

## பற்றீஷியன்இன்ஸ்ரிரியூட்ஸ்

கீழ் குறிப்பிட்டவைக்கு
செய்முறை நெறிமுறை உட்பட்ட
எமது அடுத்த வகுப்புகள் எதிர்வரும்
**வியாழக்கிழமை 15-11-1984-ல்**
**ஆரம்பமாகும்**

6 மாதகால பகுதி நேர வகுப்பு:
- ★ மோட்டார் மெக்கானிஸம் (MOTOR MECHANISM)
- ★ எலக்ரிக்கல் என்ஜினியரிங் வேர்க்ஸ் டிப்புளோமா (ELECTRICAL ENGINEERING WORKS DIPLOMA)
- ★ படம்வரைதல்–பில்டர்ஸ் குவாண்ரிரிஸ் உட்பட (DRAFTS ANSHIP — INCLUSIVE OF BUILDERS QUANTITIES)
- ★ எலெக்ரோனிக்ஸ் (ELECTRONICS)

3 மாத கால பகுதி நேர வகுப்பு:
- ★ கடைச்சல் இயந்திர இயக்குதல் (LATHE OPERATION)
- ★ மின் வெல்டிங் (ARC WELDING)
- ★ றெவ்றிஜறேஷன் (REFRIGERATION)
- ★ தொழிற்சாலைகள் மின்இணைப்பு (FACTORY WIRING)

1 மாதகால பகுதி வகுப்பு:
- ★ வீட்டு மின் இணைப்பு (HOUSE WIRING)
- ★ நீர் குழாய் இணைப்பு (PLUMBING)

இவ் நிறுவனத்தில் விற்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் மட்டும் திங்கள் 12-11-1984 பி.ப. 4-00 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பப் பத்திரமும் மற்றும் விபரங்களும் இக் கந்தோரில் நேரில் வந்து மு. ப. 9-30 மணி தொடக்கம் பி. ப, 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்

ஒவ்வொரு வகுப்பிலும் 15 பேர் மாத்திரம் விண்ணப்பிக்கும் கிரமப்படி சேர்க்கப்படுவர். ஆகவே உடன் விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தடுக்கவும்.

பதிவாளர்,
**பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்**
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ். பெரியாஸ்பத்திரியில் 3 'எக்ஸ்-ரே' இயந்திரங்களும் பழுதடைந்தன!

## நோயாளர் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியிலுள்ள மூன்று 'எக்ஸ்-ரே' படம் பிடிக்கும் இயந்திரங்கள் பழுதடைந்து விட்டதால், கடந்த இரு தினங்களாக 'எக்ஸ்-ரே' படங்கள் எடுக்கப்படவில்லை.

இந்த இயந்திரங்கள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக சிறிது சிறிதாகப் பழுதடைந்து தற்போது முற்றாகப் பழுதடைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

ஒரு இயந்திரத்தில் மட்டும் சிறிய படங்கள் மட்டும் பலத்த சிரமத்தின் மத்தியில் எடுக்கப்பட்டுவருகிறதாம்.

இதுபற்றி மேலிடத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து சில மாதத்திற்கு முன்னர் ஒரு குழுவினர் வந்துபார்த்துவிட்டுச் சென்றதாகவும், ஆனால் அதன்பின்னர் திருத்தப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

மூன்று 'எக்ஸ்-ரே' இயந்திரங்களும் பழுதடைந்துவிட்டதால் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (க)

## ஜி.ஜி.க்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நினைவுதினம் நேற்று யாழ்ப்பாணத்தில் அமைதியாகக் கொண்டாடப்பட்டது.

முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. எஸ். யேசுதாசன், தமிழ்க்காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். சுந்தரலிங்கம், கமிட்டி உறுப்பினர் திரு எம்.என். வின்சன்ட் ஆகியோர் குருநகரிலுள்ள அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் சிலைக்கு நேற்றுக் காலை மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர்கள். [க]

# மாத இறுதியில் 50 வடபகுதி இளைஞர்மீது வழக்கு தாக்கல்!

## 100 பேர் விரைவில் விடுதலை

[கொழும்பு]

வடபகுதியைச் சேர்ந்த ஐம்பது தமிழ் இளைஞர்கள் மீது இம்மாத இறுதிப் பகுதியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் வழக்குத் தாக்கல்செய்யப்படவுள்ளது.

இத்தகவலை சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

இந்த இளைஞர்கள் அனைவரும் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். குற்றச் சம்பவங்கள் தொடர்பாக இவர்கள்மீது வழக்குத் தாக்கல்செய்யக்கூடிய விதத்தில் சான்றுகள் காணப்படுவதாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இவ்வழக்குகள் தாக்கலாகும்.

இதேவேளை தடுப்புக் காவலிலுள்ள வடபகுதித் தமிழ் இளைஞர்களில் சுமார் நூறு பேர்வரை விரைவில் விடுதலை செய்யப்படவிருக்கிறார்களென்றும் அறிவிக்கப்பட்டது. இந்தஇளைஞர்கள்மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கான போதியளவு ஆதாரங்கள் இல்லையென்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

நூறு வடபகுதி இளைஞர்கள் விடுதலைசெய்யப்படவிருக்கின்றபோதிலும் அவர்கள் மீதான கண்காணிப்பு விடுதலையான பின்னரும் தொடரும் என்று அறிவிக்கப்பட்டது. [கி]

# வேம்படி மகளிர் கல்லூரி 12-ல் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா இம்மாதம் 12ம் தேதி காலை நடைபெறவிருக்கிறது

யாழ். வைத்திய அத்தியட்சகர் டாக்டர் நச்சினார்க்கினியர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திருமதி சரோஜா நச்சினார்க்கினியர் பரிசில்களை வழங்குவார்.

மாவட்டப் போட்டியில் இசை, நடன, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். ஆடம்பரமின்றி அமைதியான முறையில் இப்பரிசளிப்பு விழா நடைபெறும். (க)

# யாழ். பல்கலைக்கழக மாணவர் நிவாரண உதவி

(யாழ்ப்பாணம்)

புளியங்குளத்தில் இடம்பெற்றசம்பவத்தின்போது தீக்கிரையாக்கப்பட்ட இரு வீடுகளைச்சேர்ந்தவர்களுக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நிவாரண உதவிகள் அளித்துள்ளனர்.

குறிப்பிட்ட இரு வீடுகளிலுமுள்ள உடைமைகள், மற்றும் உடுபிடவைகள், பாத்திரங்கள், விதைநெல் ஆகியனவும் தீவைத்து எரிக்கப்பட்டிருந்தன.

இவ்விரு குடும்பங்களுக்கும் சகல உதவிகளும் வழங்கிய யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் விதைநெல் வாங்குவதற்கும் நிதிஉதவி வழங்கியுள்ளனர்

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னர் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்தே இப்பொழுது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்கிவருதாக அதன் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (மா)

## மரண அறிவித்தல்

### திருமதி Ruth Devamany Ramanathan (மம் பாட்டி)

முன்னைநாள் Lainad Industries உரிமையாளர் திரு. K. Ramanathan அவரது அன்பு மனைவியும் திரு. Daniel Jebanesan (Mo or Instructor) அவர்களது அன்புத் தாயாரும், திரு வே. நாகலிங்கம் (முன்னாள் சோலைவரி உத்தியோகஸ்தர்), காலஞ்சென்ற திருமதி பரஞ்சோதி நாகலிங்கம் அவர்களது அன்பு மகளும், திருமதி யோகமணி நேசமாணிக்கம், திரு N. தேவபாலசிங்கம் (Retd Lecturer Palaly Teacher's College) திரு. தேவபாலன் (முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர், Retd. Sports Officer), திரு. N பூபாலசிங்கம் (Insurance Manager, John Keels) அவர்களது அன்புச் சகோதரியும், திருமதி சசிக்கலா ஜெபநேசன் அவர்களது அன்பு மாமியும், செல்வன் அனோஜனது அன்புப் பேத்தியுமாகிய திருமதி Ruth Devamany Ramanathan 7-11-84 அன்று மறுமைக்குள் பிரவேசித்தார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனையின் பின் சனிக்கிழமை (10-11-84) காலை 10-00 மணிக்கு கொட்டடி கிறிஸ்தவ பொதுசவக்காலைக்கு நல்லடக்கத்திற்காக திருநெல்வேலி பல்கலைக்கழக வீதி இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும். 656

## இன்று அடிக்கல் நாட்டு விழா

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வசந்த மண்டப அடிக்கல் நாட்டுவிழா இன்று காலை நடைபெறவுள்ளது.

## தீவிரவாதிகள் கடத்தினர்

[கொழும்பு]

தெற்கிலிருந்து மாக்கறி ஏற்றிக்கொண்டு வடக்கே வந்த லொறியொன்றை உடுவில் பகுதியில் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்

இந்த லொறியில் வந்த நால்வரில் இருவரை தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளதாகவும் கூறப்பட்டது.

## 'யாழ்தேவி'யும் தாமதம்

[யாழ்ப்பாணம்]

'யாழ்தேவி' நேற்று நண்பகல் சுமார் ஒரு மணித்தியாலம் தாமதமாக வந்தது பிற்பகல் இரண்டரை மணிக்கு வந்த 'யாழ்தேவி' மூன்றரை மணிக்குப் புறப்பட்டது

நேற்று முன்தினம் 'இன்ரசிற்றி' ரயிலும் தாமதித்தே வந்தது.

## மின் விநியோகம் இன்று சீராகும்

[யாழ்ப்பாணம்]

யாழ்நகரில் சிலபகுதிகளில் நேற்றுக் காலை முதல் மின்சாரம் தடைப்பட்டது.

கம்பி ஒன்று அறுந்துவிட்டதால் இந்தத் தடை ஏற்பட்டதாகவும், இன்று காலைதான் மீண்டும், மின்சாரம் அப்பகுதிகளுக்கு கிடைக்கும் என்றும் யாழ் மாநகர மின்சாரசபையினர் தெரிவித்தனர். [க]

# பருத்தித்துறையில் மீண்டும் சோதனை

## 4 பேர் மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகரப்பகுதியில் நேற்றுக் காலை ஆயுதப் படையினர் பலத்த சோதனை நடத்தினார்கள்.

விசாரணைக்காக நால்வர் அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட நால்வரும், வர்த்தகநிலையங்களை சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

நண்பகல்வரை சோதனை நடைபெற்றதாம். (க

## பி. பி. ஸி. வருத்தம் தெரிவித்தது

லண்டன், நவ. 8

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் கொலை தொடர்பாக லண்டனிலுள்ள சீக்கியத் தலைவர் திரு. சௌஹான் சிங்கின் கருத்துக்களை ஒலிபரப்பியமைக்காக பிரிட்டிஷ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் [பி பி சி] வருத்தம் தெரிவித்துள்ளது

லண்டனிலுள்ள இந்தியத் தூதரகத்திடம் இக்கூட்டுத்தாபனம் வருத்தம் தெரிவித்துள்ளது.

இந்திராவின் கொலை தொடர்பாக திரு. சௌஹான்சிங் தெரிவித்த கருத்துக்கள் அருவருப்பானவையென்றும் இக் கூட்டுத்தாபனம் கூறியுள்ளது. [வெ]

## இளைஞர்கள் விசாரணை

(யாழ்ப்பாணம்)

அலம்பிலில் நேற்று ஆயுதப் படையினர் விசாரணைக்காக மூன்று இளைஞர்களை அழைத்துச் சென்றனா.

வாகனங்களும் சோதனையிடப்பட்டதாகக் கூறப்படுகிறது (க)

## ஆலய பூசகர் மீது தாக்குதல்

[கரவெட்டி]

அண்மையில் கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற சோதனைகளின்போது இச்சோதனைகளுக்குட்பட்ட சில ஆலயங்களில் பிராயச்சித்தங்கள் செய்யப்பட்டன.

இங்கு இச்சோதனை இடம்பெற்றபோது ஆலயப் பூசகர் ஒருவர் பலத்த தாக்குதலுக்குள்ளானார்.

## லலித்

(1ம் பக்கம்4கலத் தொடர்ச்சி)

கள் குழுவின் அழைப்பை ஏற்று, மட்டக்களப்பிற்கு நேற்று விஜயம் செய்தார்.

இவரைஅங்கு மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் தலைவர் திரு ஜே ஜே டேவிட், மட்டக்களப்பு, திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, வண. பிதா சந்திரா பெர்னாண்டோ, ஜனாப் ஏ. எஸ். அசீஸ் ஆகியோர் சந்தித்து, மட்டக்களப்பின் தற்போதைய நிலைமை குறித்து எடுத்துக்கூறினர்

## இந்திரா காந்தி

(1-ம்பக்க 4ம்கலத்தொடர்ச்சி)

துறையின் தந்தை' என்றும் அழைக்கப்படுபவர்.

இதே போன்று இந்திய புலனாய்வுத்துறையின் இயக்குநராகவிருந்த ஆர். கே. கப்பூர், துணை இயக்குநர் ரஜன் சைகார் ஆகிய இருவரும் இத்துறையிலிருந்து வேறு ஒ துறைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்திய புலனாய்வுத் துறையில் இயக்குநராக பாராரி நியமிக்கப்பட்டுள்ளார். சிரேஷ்ட துணை இயக்குநராக எம் கே நாராயணனும் துணை இயக்குநராக எஸ். பி, திரிபேதி என்பவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (சூ)

## முன்னாள் இராணுவ அதிகாரி கைது

புதுடில்லி, நவ. 8

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் படுகொலை தொடர்பாக முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்திராவைக் கொலைசெய்த கொலைஞர்களிலொருவரான சத்வான்சிங் தெரிவித்த தகவலையடுத்தே இந்த இராணுவ அதிகாரி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம்

[கொழும்பு]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விவசாயபீடம் ஏற்படுத்தப்படவுள்ளது. இப்பீடம் கிளிநொச்சியில் அமைக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங்களிலும் பல புதிய கல்வி பீடங்கள் அமைக்கப்படவுள்ளதாகப் பல்கலைக்கழக மானியக் குழுவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இளம் பெண்

(1-ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

ரூபா பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

இக்கருச்சிதைவுக்கு உடந்தையாக விருந்த வேறு இருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர் [சூ]

## எம். ஜி. ஆர்.

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

திரு எம். ஜி. ராமச்சந்திரன் உடல் நிலையில் நல்லமுன்னேற்றம் காணப்படுவதாக நேற்றிரவு வெளியான மருத்துவமனை அறிக்கை கூறுகிறது.

முதலமைச்சருக்கு சிறுநீரகம் பொருத்துவது பற்றிய முடிவு இரண்டு அல்லது மூன்றுவாரங்களின் பின்னர்தான் முடிவு செய்யப்படும்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சூ)

## இந்திரா அஸ்தி

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

பாடகியும், நேரு குடும்ப நண்பருமான திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ராமநாம பஜனைகளுடன் இக்கீதாஞ்சலிகளை ஆரம்பித்தார் இவரைத் தொடர்ந்து தமிழகத்தின் பிரபல இசைக் கலைஞர்களும் கீதாஞ்சலிசெலுத்திவருகின்றனர்

நேற்றையதினம் பலகலைஞர்கள் ஒன்றாகச் சேர்ந்து இசை நிகழ்ச்சி நடத்தியதைக்காணமுடிந்தது [கி]

## சர்வ கட்சி

(1ம்பக்க 5ம் கலத் தொடர்ச்சி)

மாதம் 17ம், 18ம் திகதிகளில் தினமும் பிற்பகல் 4-3 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆவணங்களைத் தயாரிப்பதற்காகவே இம்மகாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மகாநாட்டின் செயலாளர் தெரிவித்தார்.

அடுத்த முழுநிறைவானகூட்டத்தொடரில் ஒவ்வொரு கட்சியிலிருந்தும், ஸ்தாபனங்களிலிருந்தும் மூன்றுக்குமேற்படாத பிரதிநிதிகள் கலந்துகொள்வார்களென்றும் அவர் கூறினார். [வெ]

இப் பத்திரிகை ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tephone number 22389 - 24126